13 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வெள்ளக்கோவில் நகராட்சி மற்றும் வழியோரக் கிராமத்திற்குக் குடிநீர் வழங்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கை அந்தப் பகுதியில் இருந்து வந்த காரணத்தால் இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து அரசு உத்தரவிட்டு அந்த அடிப்படையிலே காங்கேயம் பேரூராட்சி, வெள்ளக்கோவில் நகராட்சி மற்றும் வழியோர 174 ஊரகக் குடியிருப்புகளுக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடிவு செய்து, அந்த வகையிலே ரூ.47 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கையையும் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2—

உழவர் சந்தை

***91278—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.

2010 ஏப்ரல் 5]

திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய சட்டமன்றத்தில் எனக்கு இரண்டாவது கேள்விக்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்திருக்கின்றீர்கள். நான் இந்த அவைக்குள்ளே முதன்முதலாகக் காலடி எடுத்து வைக்கின்றபோது இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப்போல் ஒரு உணர்வு தோன்றுவதற்குக் காரணமாய் இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை அவருடைய பொற்பாதங்களிலே சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய சந்தை எனப் பெயர்பெற்ற புன்செய் புளியம்பட்டி, விவசாயிகள் நிறைந்த கிராமங்கள் அதிகமாக உள்ள பகுதி. மக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகள் கிடைத்திடவும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைத்திடவும் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய நலத் திட்டம் உழவர் சந்தை. எனவே, புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் உழவர் சந்தை அமைத்துத் தந்தால் மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமையும் என்பதால் புன்செய் புளியம்பட்டியில் உழவர் சந்தை அமைத்துத் தர மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே எழுப்பிய இந்த வினா—இந்த வரலாற்றுச் சிறப்பு மிகுந்த சட்டப் பேரவையை உருவாக்கித் தந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களை நினைவுகூர்ந்து, இந்த உழவர் சந்தை ஆரம்பித்துத் தரப்படுமா என்று இங்கே வினா எழுப்பியிருக்கின்றார்கள். புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் 14,832 மக்கட்தொகை உள்ளது. சத்தியமங்கலத்திலிருந்து புன்செய் புளியம்பட்டி நகராட்சி 20 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ளது. புன்செய் புளியம்பட்டியைச் சுற்றி அமைந்துள்ள 7 கிராமங்களில் 74 எக்டர் பரப்பளவில், தக்காளி, வெண்டை, பச்சை மிளகாய், கத்தரிக்காய், காராமணி, பாகற்காய், பீர்க்கன், புடலை, முருங்கை, தேங்காய், வாழை, மரவள்ளி, வெங்காயம், மா, கொய்யா, சப்போட்டா, நெல்லி மற்றும் கீரை வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. அங்கே சந்தை இருக்கின்ற காரணத்தினாலே அந்தச்

சந்தையில் வாரந்தோறும், சத்தியமங்கலத்திலே இவை விற்பனையாகின்ற காரணத்தாலே உழவர் சந்தை தொடங்கினால், காய்கறி வரத்து குறைவாக இருக்கும் என்று அரசு அலுவலர்கள் தெரிவித்து இருக்கின்றார்கள். இருந்தாலும், இந்தப் புதிய சட்டப் பேரவை வளாகத்திலிருந்து கேள்வி எழுப்பியிருக்கிற காரணத்தால் மீண்டும் பரிசீலித்து, வாய்ப்பு இருக்குமானால், தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.*

திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அந்த வகையிலே பரிசீலனை செய்து, எனது தொகுதியிலுள்ள புன்செய் புளியம்பட்டியில் உழவர் சந்தை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.*

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள திருமருகலில் உழவர் சந்தை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) மைக் இருக்கிறது, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) பட்டனை அழுத்துங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை, ஏழை எளிய விவசாய மக்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டது. வரவேற்கிறோம். மாண்புமிகு தமிழக

2010 ஏப்ரல் 5]

முதல்வர் அவர்களால் என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் உழவர் சந்தை திறக்கப்பட்டது. திறந்த அந்த நாளிலிருந்து மாண்புமிகு அமைச்சர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் பல்வேறு முறையில் முயற்சி எடுத்தும் இதுநாள் வரையிலும் ஒரு விவசாயிகூட அங்கு வந்து பயன்பெறவில்லை. நகரத்திற்கு ஒதுக்குப்புறமாக அமைந்த காரணத்தினால் அது பயன்படாமல் இருக்கிறது. அதே நேரத்தில், கடலூரில் இருக்கிற உழவர் சந்தை ஆயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்ற அற்புதமான உழவர் சந்தையாக இயங்கி வருகிறது. கடலூர் நகராட்சிபோல் அல்லது மற்ற மாவட்டங்களில் சீரோடும், சிறப்போடும் இயங்குவதுபோல் என்னுடைய பண்ருட்டி தொகுதியில் அந்த உழவர் சந்தை தொடர்ந்து மக்கள் பயன்படுகின்ற வகையில் பொதுவான இடத்தில் இயங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நன்மைகளைக் கருதியும், நுகர்வோர்களின் நன்மைகளைக் கருதியும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25-10-1999-ல் இந்த உழவர் சந்தையைத் தொடங்குவதற்கு அனுமதித்து, அதுவும் ஒரே ஆண்டில் 100 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு, முதல் உழவர் சந்தையை மதுரையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கியும் வைத்தார்கள். இப்போது தமிழ்நாட்டிலே 151 உழவர் சந்தைகள்மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 2 கோடியே 65 இலட்சம் மதிப்புள்ள 1,944 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் 8,389 விவசாயிகளால் கொண்டு வரப்பட்டு 3,35,000 நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள். பண்ருட்டியைப் பொறுத்தவரைக்கும், அந்த உழவர் சந்தையைத் தொடங்குகிறபோது அந்த நிலை தெரியவரவில்லை. இப்போது, அது ஒதுக்குப்புறமாக இருக்கிறது, அதை பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் பக்கத்திலே அமைக்கலாம், அதை மாற்றியமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வரப்பெற்றிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணா கலை அரங்கிலுள்ள உழவர் சந்தை தொடர்ந்து பயன்படாத நிலையில் உள்ளது. உழவர்கள் யாரும் அங்கே வந்து தாங்கள் பயிரிட்ட காய், கனிகளை வியாபாரம் செய்ததாகத் தெரியவில்லை. பல பத்திரிகைகளில் இந்தச் செய்தி தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கிறது. அந்த உழவர் சந்தை உழவர்களுடைய பயன்பாட்டுக்கு எப்போது வரும் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்தில் தொடங்கப்பட்ட அந்த உழவர் சந்தை பயன்படும் என்றுதான் அங்கே தொடங்கினோம். ஆனால், அங்கே காய்கறி வரத்து குறைவாகவும், நுகர்வோர்கள் குறைவாகவும் வரக்கூடிய காரணத்தினாலே எதிர்பார்த்த அளவுக்கு அந்தச் சந்தை வெற்றிகரமாகச் செயல்படவில்லை. ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றியமைத்தால் பயன் இருக்குமா என்று இப்போது அரசு அலுவலர்களிடத்திலே கேட்டு, அறிக்கை பெறப்படவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

3—

நீதிமன்ற வளாகம்

***59308—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?